# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

## இலங்கை திரிபோஷ லிமிடெட்

### பெறுகை: 750 மெ.தொன்கள் சோயா அவரை (Soya Beans) வழங்குதல்

**(விலைமனு இல. SLTL/TB/12/2026)**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டெட்டிற்கு 750 மெ.தொன்கள் சோயா அவரை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை திரிபோஷ லிமிடெட்டின் சார்பில் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருக்க வேண்டும் என்பதுடன் விலைமனுதாரர் 2007இன் 7ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2026-08-07ஆம் திகதி முதல் 2026-11-06ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக வேண்டும்.

5. ஆர்வங்காட்டும் விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 சகிதம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாக மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் செய்வதன் பேரில் 2026-08-06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஜா-எல, கப்புவத்த, த.பெ. இல. 17, நீர்கொழும்பு வீதி, இலங்கை திரிபோஷ லிமிட்டெட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து (011-2236588/011-2237418) ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. விலைமனுக்கள் 2026-08-07ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரியில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

7. அனைத்து விலைமனுக்களும் பின்வரும் வகையில் மத்திய வங்கியால் அனுமதிக்கப்படும் இலங்கையில் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| பெறுகையின் பெயர் | மீளளிக்கப் படாத கட்டணத் தொகை (இல. ரூபா) | விலைக்கோரல் பிணை முறித் தொகை (இல. ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (119 நாட்கள்) |
|---|---|---|---|
| 750 மெ.தொன்கள் சோயா அவரை வழங்குதல்<br>விலைமனு இல. SLTL/TB/12/2026 | 50,000.00 | 5,625,000.00 | 2026-08-07ஆம் திகதி முதல் 2026-12-04ஆம் திகதி வரை |

**மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை திரிபோஷ லிமிட்டெட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**